NP – 042

6 A

# I Semester B.Com. Examination, May 2022
## (NEP-2021-22 and Onwards)
## TAMIL LANGUAGE (Paper – I) (Part – I)

St. Claret College LIBRARY Bangalore-560013

Time : 2½ Hours  Max. Marks : 60

### SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5×1=5)

1) தமிழின் முதல் எழுத்துகள்

1) 18  2) 216  3) 12  4) 30

2) மெய் எழுத்துகளின் வகைகள்

1) மூன்று  2) நான்கு  3) ஐந்து  4) ஆறு

3) மருதுபாண்டியன் நாடகத்தின் ஆசிரியர்

1) அண்ணாதுரை  2) அசோகமித்திரன்

3) தொ.மு.சி. ரகுநாதன்  4) கோமல்சாமிநாதன்

4) சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன்

1) அதியமான்  2) நல்லியக்கோடன்

3) பாரி  4) ஓரி

5) கண் உடையர் என்பவர்

1) பணக்காரர்  2) கல்லாதவர்  3) ஏழை  4) கற்றோர்

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (5×3=15)

1) சிறு கோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்
உயிர்தவச் சிறிது; காமமோ பெரிதே!

2) நைவளம் பழுநிய நயம்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க

3) மறுஇன்றி விளங்கிய வடுஇல் வாய்வாள்,
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்

4) சிறப்பொடு பூசனை செல்லாது-வானம்
வறக்குமேல் வானோர்க்கு ஈண்டு

5) இன்னாது, இனன்இல் ஊர் வாழ்தல்; அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு

P.T.O.

6) மகாராஜா! அதென்ன ஆரவாரம் ? நமது அரண்மனை வாசலிலேயே கேட்பது போலிருக்கிறதே

7) இதென்ன அநியாயம்! அய்யா சாய்பு ! என் முதுகிலே அடியுங்க; பட்டுக்கிடறேன். வயித்திலே அடியாதிங்க! இப்படிக் சோத்து சட்டியை தூக்கி உடைக்கிறீங்களே! இது நியாயமா ?

8) இந்த வெள்ளையர்களை விரட்டியடித்த பின்பு, இந்த அரசுரிமையை வேண்டுமானால் நானே மனமுவந்து விட்டுக் கொடுத்திருப்பேனே!

## SECTION – B

III. எவையேனும் ஐந்திற்கு சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1) சார்பெழுத்துகளின் வகைகளைக் குறிப்பிடுக.
2) சொல்லிசை அளபெடையைச் சான்றுடன் விளக்குக.
3) குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுடன் குறிப்பிடுக.
4) போலியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5) பருவம் கண்டு ஆற்றாது, தலைவி உரைத்ததை குறுந்தொகைப் பாடல் வழிநின்று விளக்குக.
6) வஞ்சி மாநகரின் சிறப்பினை சிறுபாணாற்றுப் படை வழிநின்று கூறுக.
7) வெள்ளை மருதுவின் தியாக உணர்வினை மருதுபாண்டியன் நாடகம் வழி விளக்குக.
8) முத்துவடுக நாதரின் இறுதி உத்தரவு குறித்து எழுதுக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கிற்கு விடை தருக. **(4×5=20)**

1) ஆற்றாள் என கவலைப்பட்ட தோழிக்கு, தலைவி சொன்னதை ஓதலாந்தையார் வழிநின்று விளக்குக.
2) கடை ஏழு வள்ளல்களின் கொடைத்தன்மை குறித்து எழுதுக.
3) 'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்திலிருந்து எவையேனும் ஐந்து குறள்களின் கருத்துகளைத் தொகுத்து வரைக.
4) வேலுநாச்சியாரின் பாத்திரப் படைப்பை ''மருதுபாண்டியன்'' நாடகம் வழி விளக்குக.
5) ''மருதுபாண்டியன்'' நாடகம் குறிப்பிடும் வெள்ளையர்களின் கைக்கூலிகள் குறித்து எழுதுக.
6) கலெக்டர் லூஷிங்டன் பாத்திரத்தை விளக்குக.

---